விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 342 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 10 திங்கட்கிழமை (25.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வவுனியா சிறையில் கைதி மர்ம மரணம்

(வவுனியா)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வவுனியா செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 15

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை இரண்டாயிரத்து 312 பரீட்சை நிலையங்களில் மூன்று இலட்சத்து 20 ஆயிரத்து 183 பரீட்சார்த்திகள் 15

## வாழ்த்துகின்றோம்




இன்று ஆரம்பமாகும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவச் செல்வங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

கல்விப் பிரிவு,
வலம்புரி

### வடக்கு - கிழக்குக்கு சிவப்பு எச்சரிக்கை

# காற்றழுத்தத் தாழமுக்கம்

# கடும் மழை - காற்று அபாயம்



(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழமுக்கமானது இன்று முதல் கிழக்கிலிருந்து வடக்குக் கடற்பிராந்தியத்தினை நோக்கி நகரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இந்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குத் தென்கிழக்குப் பகுதியில் உருவாகியுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்குக் கிழக்கில் 150 மில்லிமீற்றருக்கும் அதிக மழை கிடைக்கப் பெறும் எனவும் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 15

### தொடரும் கனமழை

## வடக்கு மாகாணம் அதிகளவில் பாதிப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தின் காரணமாக நாட்டில் தொடர்ச்சியாகக் கனமழை பெய்துவரும் நிலையில் வடக்கு மாகாணம் உள்ளடங்கலாக மூன்று மாகாணங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 622 பேர் இதுவரை பாதிப் 15

## கடல் கொந்தளிக்கும் அபாயம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றானது இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரையில் பலத்த வேகத்தில் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் குறித்த கடற்பரப்புகள் கொந்தளிப்பாகவும், கடல் அலைகள் 15

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய படையில் சேர்த்த முகவர்

### குருநகர் இளைஞர் இருவருக்கு ஏற்பட்ட பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை அழைத்துச் சென்ற வெளிநாட்டு முகவர் அவர்களை ஏமாற்றி ரஷ்ய நாட்டு எல்லைப்படையில் சேர்த்துள்ளதாக அவர்களின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞர்களை ரஷ்ய எல்லைப்படையில் இருந்து மீட்டுத் தருவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களின் உறவுகள் அரசாங்கத்திடம் உருக்கமான கோரிக்கையை முன்வைத்துள்ளன. (ந-7)

### இலங்கையில் நடந்த தமிழின அழிப்பு

## சர்வதேச நீதிமன்றம் ஊடாக விசாரணையை முன்னெடுப்பது அவசியம்



### கனேடிய பாராளுமன்றில் முன்மொழிவு

(ஒன்ராரியோ)

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நகர்வுகளை கனேடிய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தும் முன் 04

### தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டம்

## ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச நாம் தயாராக இருக்கின்றோம்



### கஜேந்திரகுமார் எம்.பி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 15

## விகிதாசார முறையில் மாகாண சபைத் தேர்தல்

### கட்சிச் சிக்கல்களுக்குத் தீர்வு - விஜித

(கொழும்பு)




மாகாண சபைத் தேர்தலுக்கு விகிதாசார முறையே சிறந்தது. மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

பிறப்பு 1947 - 09 - 10



இறப்பு 2024 - 11 - 23

## சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

சங்கானை கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் 23.11.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் சின்னக்கிளியின் பாசமிகு கணவரும் அமரர் தர்மசீலன் (ஆசிரியர் - பௌதிகவியல் யா/அருணோதயாக் கல்லூரி), பிரமிளா (ஆசிரியை - யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னட்டி - நாகமுத்துவின் மருமகனும் செல்வரட்ணம், இராஜேஸ்வரி, புஸ்பராணி, அழகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சர்மிலா, தர்மபாலன்(கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), சஜிந்தன், சாருஜன், நிஷாந்தன், நிரோஜி, செல்வி, துளசிகா, துனிஸ்ரா, துஷ்யந்தன், விதுஷன், துவாரகன் ஆகியோரின் மாமனாரும் வசந்தின் பெரியப்பாவும் காலஞ்சென்ற முருகையா மற்றும் சின்னத்துரை, வசீகரன், விமலச்சந்திரன், லிங்கேஸ்வரி காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் மீனாட்சி, சின்னம்மா, செல்லையா, பசுபதி, நாகம்மா ஆகியோரின் மைத்துனரும் அபிராம், அனுராம், அஜிராம், இலக்கியா, இசைப்பிரியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.11.2024 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு றோட்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(2608)

தகவல்:
குடும்பத்தினர்

## மாத்தளை விமான நிலையம்; 8 மடங்கு செலவு

2023ஆம் ஆண்டு மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செலவானது, வருமானத்தை விட எட்டு மடங்கு அதிகரித்துள்ளதாகத் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
25 கார்த்திகை 2024
JSAC
"பெண்களுக்கெதிரான பால் நிலைசார் வன்முறையை நிறுத்துவோம். சமத்துவத்தைப் பேணுவோம்"
16
2024
(C-1653)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## மணிவிழா நாயகியை
### மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



திருமதி மங்களாம்பிகை ஜெகதீசன்
( SLTS - I ) BA, Dip.in Edu.

ஆசிரியர்
யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை


மங்களாம்பிகையே தாயே
மனமகிழ் நாளாம் இன்று
உங்களின் சேவை தன்னை
உளமார நிறைவு செய்யும்,
இங்கு இவ் வேளைதன்னில்
இனிய நல் வாழ்த்துக் கூறும்
எங்களின் அன்பை ஏற்பாய்!
ஏற்றமாய் வாழி வாழி!

Best Wishes!

வாழ்த்துவோர் : ஆசிரியர் திருமதி ஜெ.மங்களாம்பிகையுடன் பணியாற்றிய ஓய்வு நிலை அதிபர், ஓய்வு நிலைப் பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்.

(2604)

# கண்ணீர் அஞ்சலி



## திரு. சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்)

உரிமையாளர்
( நியூ கமல் செரமிக்ஸ் ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம் மற்றும் ஞானம்ஸ் கோட்டல் – மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் )

எங்கள் கண்களில் நிறைந்த கண்ணீர்,
உங்கள் நினைவில் ஏங்கும் மனநிலை,
வியாபாரத்தில் அடைந்த உயரம்,
உங்கள் வழிகாட்டுதலின் சிகரம்.

உயிர் தூணாக வாழ்ந்த உங்களின் செம்பாகை,
சொற்கடன் தந்த உங்கள் பாச மனதை,
நாங்கள் என்றும் மறக்க மாட்டோம்,
நீங்கள் எங்கள் வாழ்வின் ஒளி சொர்க்கம்.

உங்கள் மறைவால் நிறைந்த சோகம்,
எங்கள் வாழ்வில் அழிந்த ஒளி.
ஆனால் உங்கள் நினைவுகள் என்றும்,
எங்கள் மனதில் என்றும் ஒளிரும் தீபம்.

அஞ்சலிக்கான வார்த்தைகள் போதவில்லை,
ஐயா உங்கள் நினைவாய் மாறும் நிழல்.
உங்கள் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

(2610)


தோற்றம்
31.07.1950

மறைவு
24.11.2024

உங்கள் இழப்பால் விழி நீர் வழிந்தோட
துயருற்று நிற்கும்
நியூ கமல் செரமிக்ஸ் ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் டில்லி விஜயம் உற்று நோக்கும் சர்வதேசம்



(கொழும்பு)

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய இணைப்புத் திட்டங்கள், சீன விவகாரம் போன்ற முக்கிய விடயங்கள் பேச்சுக்களின் போது கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் எதிர்வரும் டிசம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் இடம்பெறும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், உறுதியான திகதி உள்ளிட்ட விடயங்கள் இது வரையில் இறுதிப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், இலங்கையின் பார்வையில் ஜனாதிபதியின் இந்திய விஜயம் மிகவும் முக்கியமானதாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் டில்லி விஜயத்தை ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இலங்கை - இந்திய இணைப்புத் திட்டங்களை அடிப்படையாக கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்து இருதரப்பு பேச்சுக்களில் முக்கிய விடயமாக கருதப்படும்.

குறிப்பாக, ரணிலின் காலத்தில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் ஒப்பந்தம், திருமலை பொருளாதார வலயத் திட்டம், மன்னாரில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் பணியை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கியமை உட்பட கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்தி திட்டமும் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் இந்த ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்திருந்தார்.

மேலும் இலங்கையின் எரிசக்தி துறையில் ஏகோபித்த உரிமையை பெறுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு முன்னர் இவ்வாறான அறிவிப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையானது இருதரப்பு பேச்சுக்களில் இந்திய முதலீடுகள் தொடர்பில் முக்கியமாக கருத்தில் கொள்ளப்படும் விடயங்களாக இருக்கும்.

மறுபுறம், இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பை இந்தியா கடந்த காலத்திலிருந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. குறிப்பாக இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கு இந்தியாவுக்கு எரிச்சல் ஊட்டும் விடயமாகவே உள்ளது.

இதனாலேயே, இலங்கையுடன் சீனா நெருக்கமாகச்செயற்படுவதற்கும் சீனப் போர்க் கப்பல்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலுக்குள் நுழைவதற்கு சீனா அனுமதிப்பதற்கும் இந்தியா எப்போதும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

2015 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இத்தகைய எதிர்ப்புகளை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளது. மேலும், சில சந்தர்ப்பங்களில் ஆட்சி மாற்றங்களுக்கு கூட இந்த எதிர்ப்புகள் வழிவகுத்தன.

இதனாலேயே இந்த டிசம்பர் மாதம் வரை சீனக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

எனவே, ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது, சீன விவகாரம் மற்றும் இரு தரப்பு இணைப்பு திட்டங்களின் எதிர்காலம் போன்ற தலைப்புகள் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

அதே போன்று சீன - இந்திய நெருக்கடிகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீண்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர். நாகலிங்கம் சிவகுருநாதன் (அப்பு)

(பிரபல புகையிலை வியாபாரி-மண்டைதீவு)

திதி: 25.11.2024 தேய்பிறை தசமி

அன்பு விதைத்து ஆசை எனும் நீர் ஊற்றி
அழகாய் நாம் வளர
உழைப்பு உயர்வென உண்மை வழி நடந்து
தேனான வாழ்வு எமக்கு
தேடித்தந்தாய் அப்பா
அன்பால் அறிவூட்டி
அகந்தை இல்லா மனம் தந்து
பண்புடன் நாம் வாழ பாதை வகுத்தாய் அப்பா
கண் மூடும் வேளையில் காலன் கைதாகி
மண்ணுலகு மறைந்தாலும்
கண்ணுலகை விட்டு கட்டழகு மறையவில்லை
எங்கள் பணி உங்கள் வழி நடப்பதே அப்பா

(527)




பிறப்பு 12.12.1944

இறப்பு 02.12.2018

குடும்பத்தினர். இறம்பைக்குளம், வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தை தமிழர்கள் கைவிடவில்லை என்பது உறுதி



## தேர்தல் முடிவு குறித்து சி.வி.விக்னேஸ்வரன்

அண்மையில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ்த்தேசமும், தமிழ்த் தேசியமும் அழியவில்லை. மாறாக தமிழ்த்தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரிந்து நின்று அரசாங்கத்தை வெற்றியடையச்செய்திருக்கிறார்களே தவிர, தமிழ்த்தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிடவில்லை எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாதத்துக்கொரு கேள்வி - பதில் பகுதியில் "தமிழ்த் தேசியம் அழிந்துவிட்டதா? தேர்தல் முடிவுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன அல்லவா?" என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

தமிழீழம் பெறமுடியாமல் போய்விடுமா என்று பிரபாகரனிடம் ஒருவர் கேட்டார். அதற்கு அவர் "தமிழீழத்தைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. அது ஏற்கனவே இருக்கிறது. அதனைப் பாதுகாப்பதற்காகத் தான் நாங்கள் போராடுகின்றோம்" எனப் பதிலளித்தாராம்.

அதேபோன்று தமிழ்த் தேசம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது. அதனைப் பாதுகாக்கும் மனோநிலையே தமிழ்த்தேசியம். அது அழிந்துவிடவில்லை. தேர்தலின் பின்னர் தமிழ்த்தேசத் தெருக்கள் பலவற்றில் இராணுவத் தடைகள் நீக்கப்பட்டதைப் பார்த்திருப்பீர்கள்.

ஒரே நாட்டுக்குள் தமிழ் பேசும் பிரதேசங்களில் மாத்திரம் ஏன் இந்தப் பாகுபாடு எனும் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ்மொழி பேசும் பிரதேசங்கள் என்ற உண்மையை உணர்ந்து செயலாற்றுபவர்களைத் தமிழ்த் தேசியத்தை அழிப்பவர்கள் என்று அடையாளம் காட்ட முடியாது.

தமிழ்த்தேசிய சிந்தனையை வைத்து வியாபாரம் நடத்தியவர்கள் தேர்தலில் காணாமல்போயிருக்கிறார்கள். தமிழ்த்தேசிய சிந்தனையை ஏளனம் செய்து, கட்சிகளைப் பிரித்து சுயநல அரசியல் நடத்திய ஒருவர் காணாமல் போயிருக்கிறார்.

இருப்பினும் நடைபெற்று முடிந்த தேர்தலில் வட, கிழக்கில் அரசாங்கம் ஆசனங்களைப் பெற்றிருப்பதே உங்களது கேள்விக்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு இறைவனால் தரப்பட்ட வரப்பிரசாதமாகும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்தை ஆதரித்தவர்கள் இன்னமும் தமிழ்த்தேசியத்துடன் தான் இருக்கிறார்கள். இருப்பினும் பல சுயேட்சைக் குழுக்களின் தோற்றம் மற்றும் பல வருடகால அரசியல் கட்சிகள் தேர்தல் உடன்பாடுகளுக்கு இடம்கொடுக்காமை போன்றவற்றால் அவர்கள் செய்வதறியாது பிரிந்துநின்று வாக்களித்திருக்கிறார்கள்.

அதேவேளை தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளின் மொத்தத் தொகையைப் பார்த்தால், தமிழ்த்தேசியத்துக்கான எமது மக்களின் ஆதரவு குறையவில்லை என்ற விடயமே புலனாகிறது.

ஆகவே தமிழ்த்தேசமும், தமிழ்த்தேசியமும் அழியவில்லை. மாறாகத் தமிழ்த் தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரிந்துநின்று அரசாங்கத்தை வெற்றியடையச்செய்திருக்கிறார்களே தவிர, தமிழ்த் தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிடவில்லை.

அதேவேளை ஐ.நா மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரை ஒன்றின்கீழ் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ்த் தேசம் என்பதை எந்தவொரு இலங்கை அரசாங்கமும் ஏற்காதவரை வட, கிழக்கு தமிழர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-7)

### இராமேஸ்வரம் – தலைமன்னார்

## கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆய்வு

(இராமேஸ்வரம்)

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது.

இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை 1914ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டு வரை கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

பின்னர் ஏற்பட்ட காலநிலை சீர்கேடு மற்றும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் போன்றவற்றின் காரணமாகக் குறித்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து குறித்த பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கான இடவசதிகள் தொடர்பில் தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார் தலைமையிலான அதிகாரிகள் நேற்று முன்தினம் ஆராய்ந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அந்த நாட்டு ஊடகங்களுக்குக் கருத்துரைத்துள்ள தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார் இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடல் வளம், பாதுகாப்பு மற்றும் கடற்றொழில் என்பவற்றுக்கு ஏற்றவகையில் கடற்போக்குவரத்து வழித்தடம் அமையும். முதற் கட்டமாக 100 முதல் 150 பயணிகள் பயணிக்கக்கூடிய வகையிலான கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர், பாம்பன் குந்துகால், அக்னி தீர்த்தம், வில்லுண்டி தீர்த்தம், தனுஷ்கோடி குருசடைதீவு உள்ளிட்ட சுற்றுலா தளங்களைப் படகில் பார்வையிடும் வகையில் கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுவதாகத் தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார் தெரிவித்துள்ளார். (ந-7)

## வெள்ள அனர்த்தம் தொடர்பில் முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்திற்கு முகம்கொடுத்தல் தொடர்பாக யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் தலைமையில் முன்னாயத்த கூட்டமானது நேற்றுப் பிரதேச செயலாளர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

இதன் போது வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கைகளை எடுத்தல்.

வெள்ள அனர்த்த ஆபத்து காரணமாக வதிவிடங்களை விட்டு வெளியேறும் மக்கள் தற்காலிகமாக தங்குவதற்கான தங்குமிடங்களைத் தயார்ப்படுத்தல்.

தற்காலிக தங்குமிடங்களில் தங்குவோருக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுத்தல்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகள் ஏற்கனவே அகற்றப்பட்டதற்கு மேலதிகமாக மேலும் இனங்காணப்பட்ட ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எட்டப்பட்டது. (ந-7, 33)

## சர்வதேச ....

மொழிவு அந்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் ஷோன் சென்னால் கனேடிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தைச்சேர்ந்த புலம்பெயர் தமிழரான நிருஜன் ஞானகுணாளனால் தயாரிக்கப்பட்டு, அந்நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் பரந்துபட்டு வாழும் புலம்பெயர் தமிழர்கள் 636 பேர் கையெழுத்திட்டிருக்கும் ஈ–5058 இலக்க முன் மொழிவையே பாராளுமன்ற உறுப்பினர் ஷான் சென் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில் தமது பாரம்பரிய தாயகமான தமிழீழத்தில் 75 வருடங்களுக்கும் மேலாக நீடித்துவரும் இனவழிப்புக்கு முகங்கொடுத்திருக்கும் ஈழத்தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் "புலம்பெயர்ந்தோரின் வீடாக" கனடா திகழ்வதாகவும், இலங்கை அரசினால் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை மீறப்பட்டிருப்பதாகவும் அம்முன்மொழிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி "1956 இல் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரத்திலிருந்து 2009 மேமாதம் வரையான வரப்பட்ட "இனவழிப்பு" யுத்தம் வரை தமிழர்களுக்கு எதிராக அரச அனுசரணையுடன் கூடிய இனப்படுகொலை பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது" எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை தொடர்பில் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நகர்வுகளைக் கனேடிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்றும், சுதந்திரத் தமிழீழ உருவாக்கம் தொடர்பில் இலங்கை வாழ் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டுடனான பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் அந்த முன்மொழிவில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## விகிதாசார....

வார்த்தையில் ஈடுபடுவோம் என வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களினால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத்தேர்தலை நடத்துவது சிறந்ததாக அமையும்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தில் சகல அரசியல் கட்சிகளுடனும் எதிர்வரும் காலங்களில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம். பொதுக் கொள்கையின் அடிப்படையில் நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது கட்டாயமாகும் என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் குப்பை போடுவோருக்கு எதிராக கடுமையான சட்டங்கள் தேவை-உபுல் ரோஹன

(புத்தளம்)

வீதிகளில் குப்பைகளை இடுதல் மற்றும் எச்சில் உமிழ்தல் என்பவற்றுக்கு எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புத்தளம் பகுதியில் செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையைச் சுத்தமான தொரு நாடாக மாற்றுவதற்கு வீதிகளில் குப்பைகளை வீசுதல், வெற்றிலை எச்சிலை உமிழ்தல் போன்ற செயற்பாடுகளை மக்கள் தவிர்ப்பதுடன், அதனை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்குக் கடுமையான புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டுவர வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். (நி-8)


## மணிவிழா நாயகியை சேவை நயந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் இடைநிலைப் பகுதித் தலைவராகவும் வரலாறு பாட ஆசிரியராகவும் பணியாற்றி 24.11.2024 அன்று ஓய்வு பெறும்

திருமதி. மங்களாம்பிகை ஜெகதீசன்

(B.A.Dip.in.Education)

பகுதித் தலைவர்
யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை

அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations!

சேவை விபரம்

- யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 11.01.1993-31.12.1994
- யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் 01.01.1995-01.01.2014
- யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை 02.01.2014-24.11.2024

(571)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.


# இந்த ஆண்டில் இதுவரை 497 இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

இந்த ஆண்டில் எல்லை மீறி இல ங்கை கடற்பரப்பினுள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 497 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக்கடற்படை தெரிவித்துள்ளது.

அத்துடன், 66 மீன்பிடி படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாகக் கடற்படை பேச்சாளர் கயான் விக்ரம சூரிய தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் இந்நாட்டு மீனவர்களின் கடற்றொழில் சார்ந்த பிரச்சினை கள், குறைபாடுகளை தீர்ப்பதற்கும் கடற் படை அதிகபட்ச பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)


## மணிவிழா வாழ்த்து

18.04.2022 தொடக்கம் எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 25.11.2024 இன்று சேவையிலிருந்து ஓய்வுபெறும் சிரேஷ்ட ஆசிரியர்

திருமதி. விஜயா அருஞ்சோதி

SLTS-I

அவர்களது ஓய்வுக்காலம் சிறக்கவும் இனிவரும் காலங்கள் என்றும் இனிதாக நலம் சூழ புகழோங்க வாழ உளமார வாழ்த்துகிறோம்.



Congratulations

சேவை விபரம்

- யா/பூநகரி மத்திய கல்லூரி (16.03.1990 - 31.12.2002)
- யா/பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை (01.01.2003 - 31.12.2013)
- யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை (01.01.2014 - 17.04.2022)
- யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை (18.04.2022 - 25.11.2024 வரை)

(2494)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.


# இராசிபலன்

25.11. 2024
கார்த்திகை 10, திங்கட்கிழமை
தசமி பின்னிரவு 3.06 மணிவரை

உத்தரம் பின்னிரவு 3.51 மணிவரை
சுபநேரம் -12.12-1.42 மணிவரை
இராகுகாலம்7.42-9.12 மணிவரை

சந்திராஷ்டமம் - அவிட்டம்

வளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் வாய்புண்டு.

**துலாம்**: நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்**: உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வழிபாட்டால் வளம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்**: சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில். எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்**: குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**: தொழில் முன்னேற்றம் கருதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி**: விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பணத் தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும்.

**தனுசு**: குடும்ப ஒற்றுமை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், போசன சுகமுண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**: உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து செரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


பெரிய துன்பம் சிறிய துன்பங்களை மறக்கடிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறங்கியாறு பெருக்கெடுப்பால் தனிமைப்படுத்தப்படும் சிராட்டிகுள கிராமம்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு - மாந்தைகிழக்கு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட சிராட்டிகுளம் கிராமத்திற்குச் செல்லும் வீதியை மூடி பறங்கிஆற்று நீர் பாய்வதனால் சிராட்டிகுளம் கிராமம் தனிமைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதுடன், பறங்கியாற்றின் நீர்வரத்து அதிகரிக்குமிடத்து சிராட்டிகுளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் ஆபத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



இவ்வாறு பறங்கியாறு பெருக்கெடுத்துப்பாய்வதனால் சிராட்டிகுளத்திலிருந்து நட்டாங்கண்டல் பாடசாலைக்கு கல்விகற்பதற்காகச் செல்லும் மாணவர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதுடன் மருத்துவ சேவைகளைப் பெறச் செல்பவர்களும் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு சிராட்டிகுளம் கிராம மக்களின் அன்றாட செயற்பாடுகளும் இதனால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சிராட்டிகுளம் கிராமமும் தனிமைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்த நிலைமைகள்தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சிராட்டிகுளம் மக்களிடம் கேட்டறிந்ததுடன் இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும், மாந்தைகிழக்கு பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தியிருந்தார். (நி-8-315)

# தொழில் முனைவோர் வாரம் வவுனியா பல்கலையில் அனுஷ்டிப்பு

(வவுனியா)

உலகளாவிய தொழில் முனைவோர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா பல்கலைக்கழகத்தில் விசேட நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக் கழகத்தின் வியாபார இணைப்பு அலகும் இங்கிலாந்திலுள்ள GATE நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ் கால மற்றும் எதிர்கால முயற்சியாளர்களுக்கான முக்கிய செயலமர்வு இடம்பெற்றது.



இதன் போது இந்திய துணைத் தூதர் சாய் முரளி மற்றும் வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஏ.அற்புதராஜா உட்பட இந்திய மற்றும் வவுனியா பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் உட்பட சுயதொழில் முயற்சியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (நி-8-350)

# உயர்தர மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பயணத்தில் முக்கியமான மைல்கல்லான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை இன்றைய தினம் எழுதும் அனைத்து மாணவர்களும் வெற்றியடைய உளமார வாழ்த்துவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.




கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகும் நிலையில், வடக்கு மாகாணத்திலிருந்து 17, 212 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், வடக்கு மாகாணம் தேசிய ரீதியில் கடந்த ஆண்டு பெற்றுக்கொண்ட முதலிடத்தை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் மாணவர்கள் செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

உங்களது கடின உழைப்பு, உறுதிப்பாடு ஆகியன வெற்றிக்கான திறவுகோல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களில் நம்பிக்கை வைத்து உங்களாலான சிறந்த முயற்சியை வெளிப்படுத்தி வெற்றிபெற வாழ்த்துகின்றேன் என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (நி-8-33)

# பேராறு வான்கதவு திறப்பு அவதானமாக இருக்குமாறு கோரிக்கை



(வவுனியா)

வவுனியா, பேராறு அணையின் கீழ்ப் பகுதியில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக தாழ் நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

அந்தவகையில் பேராற்றுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளமையால் அதன் 2 வான் கதவுகளும் 1 அடி உயரத்திற்கு திறக்கப்பட்டுள்ளன.

இதனால் நீர் செல்லும் பகுதியிலும் பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8-250)

# மாவீரர் நினைவேந்தல் தீவகத்தில் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகம் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்கள் நினைவேந்தப்பட்டனர்

மாவீரர் வாரத்தின் நான்காம் நாளாகிய நேற்று யாழ்.தீவகம் வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர்.

நிகழ்வில் மாவீரர்கள் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், வேலணை பகுதி வர்த்தகர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (நி-8-33)

## கலப்பின தென்னை இனங்களை அறிமுகம் செய்ய தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள தேங்காய் தட்டுப்பாட்டிற்கு தீர்வாக புதிய கலப்பின தென்னை இனங்களை அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கலப்பின தென்னை இனங்கள் ஊடாக குறுகிய காலத்திற்குள் தேங்காய்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய செயற்திட்டத்தின் மூலம் 3 வருடாங்கள் என்ற குறுகிய காலத்தில் அதிக பலன்களை பெற்றுக்கொள்ள முடியும் என தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் [illegible] தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடத்தவிருந்த 330 கிலோ கஞ்சா பறிமுதல்

## மூவர் கைது

(சென்னை)

ஆந்திராவில் இருந்து தஞ்சாவூர் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற மூவரை தஞ்சாவூர் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இதன்போது, கடத்தலுக்கு பயன்படுத் தப்பட்ட 3 படகுகளும், 330 கிலோ கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அருகே முடச்சிக்காடு என்ற இடத்தில் கொள்கலன் லொறிக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா தொகை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

லொறியின் உரிமையாளர் அண்ணாதுரை, லொறியின் சாரதி உட்பட மூவர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில், அண்ணாதுரைக்கு சொந்தமான லொறி, கார் மற்றும் போதைப்பொருட்களை இலங்கைக்கு கடத்துவதற்காக வைத்திருந்த மூன்று ஃபைபர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-8)

# சுற்றுலாப் பயணங்களின் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## பொலிஸார் அறிவுறுத்து

(கொழும்பு)

பாடசாலை விடுமுறை காலங்களில் சுற்றுலாப் பயணங்கள் செல்லும் போது அவதானமாக செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

குறித்த வேண்டுகோளை, பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ விடுத்துள்ளார்.



வாகனம் ஓட்டும்போதும், வெவ்வேறு இடங்களில் குளிப்பதற்கு செல்லும் போதும் கவனமாக இருக்குமாறும் சுற்றுலா தளங்களில் சிறிய பிள்ளைகள் குளிக்கும் போது ஆபத்தான இடங்களைத் தெரிவு செய்வதை தவிர்க்குமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-8)

# பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை(வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.பதவி:- எழுதுநர்**

பதவி குறியீட்டு இல :- 302/14

சம்பள அளவுத்திட்டம்:- 02/2022 இன்படி 17900-155×10-165×10-21100

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி,கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**02.பதவி:- களஞ்சிய முகாமையாளர்/கிளை முகாமையாளர்**

பதவிகுறியீட்டு இல :- 208/15

சம்பள அளவுத்திட்டம் :- 02/2022 இன்படி 17435-145×10-160×10-20485

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**03.பதவி:- விற்பனை உதவியாளர்**

பதவிகுறியீட்டு இல :- 308/16

சம்பள அளவுத்திட்டம் :- 02/2022 இன்படி 16975-135×10-150 ×10-19825

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**04. பதவி:- எரிபொருள் நிரப்புனர்**

பதவிகுறியீட்டு இல :- 313/16

சம்பள அளவுத்திட்டம் :-02/2022 இன்படி 16975-135×10-150 ×10-19825

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப் பத்திரம்/ 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**பொதுவான நிபந்தனைகள்**

- வயது 09.12.2024ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைவாக அங்கீகரிக் கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.
- கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணையும்,ஆதனப்பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்
- ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
- சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புக்களும் உண் மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதென தெரியவருமிடத்து நஷ்டாடு பெறாது உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத் தலைமையகத்தில் ரூபா- 20.00 செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை, அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தி யோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 09.12.2024ஆம் திகதிக்கு முன்னதாக "தலைவர்,பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், புலோப்பளைவீதி, பளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவி விண்ணப்பப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம் பளை.** 25.11.2024

# தேசப்பிரிய வீட்டில் கொள்ளை

(கொழும்பு)

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் வீட்டில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகிந்த தேசப்பிரியவின் அம்பலாங்கொடையில் அமைந்துள்ள வீட்டிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மகிந்த தேசப் பிரியவின் மனைவி அம்பலாங்கொடை காவல் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் போது, சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-8)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

**077 839 3974**


## பெயர்மாற்ற அறிவித்தல்

சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய் என்ற முகவரியினையுடைய இராசேஸ்வரன் பதுஜன் ஆகிய நான் 25.11.2024 இன்று திங்கட்கிழமை முதல் எனது பெயரினை இராசேஸ்வரன் பதுசன் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனி வரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**உண்மையுள்ள இராசேஸ்வரன் பதுசன் (971193263V)**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் நோர்வே (ஒஸ்லோவில்) சகல வசதியுடனும் கூடிய சொந்த வீட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அண்மையில் விவாகரத்துப் பெற்ற, எவ்வித கெட்ட பழக்கமும் அற்ற 53 வயதுடைய ஒருவருக்கு அவருடைய வயதுக்கேற்ற குடும்பப் பாங்குள்ள பெண் தேவை. சீதனம் எதுவும் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு- 076 905 5445
-077 078 2622

# பதவி வெற்றிடம்

- **கணினி தமிழ் ரைப்பிங்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3121 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உரத் தொழிற்சாலையில் கசிந்த வாயு; மூவர் பலி

### 9 பேர் மருத்துவமனையில்



(டில்லி)

மகாராஷ்டிராவின் சாங்லி மாவட்டத்தில் உள்ள உரத் தொழிற்சாலையில் உள்ள உலை ஒன்று வெடித்து விஷவாயு கசிவு ஏற்பட்டதில் 2 பெண் கள் உட்பட 3 பேர் உயிரிந்தனர். 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாங்லி மாவட்டத்தில் உள்ள ஒரு இரசாயன நிறு வனத்தில் கடந்த வியாழக் கிழமை மாலை 6.30 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

உரஆலையில் இருந்து கசிந்தது அமோனியா வாயு என்று சந்தேகிக்கப்படுவதாக சாங்லி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி-8)

## இஸ்ரேலின் வான் தாக்குதலில் பெய்ரூட்டில் 20 பேர் பலி

(பெய்ரூட்)

மத்திய பெய்ரூட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இஸ்ரேல் நடத்திய பாரிய வான்வழித் தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டுள்ளதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லெபனான் குழுவான ஹிஸ்புல்லாவுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில் தலைநகர் பெய்ரூட்டில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய தாக்குதல் இது வாகும்.

முன்னதாக, இஸ்ரேலிய ஏவுகணைகள் பெய்ரூட்டின் மையத்தில் மக்கள் தொகை அதிகம் உள்ள ஒரு குடியிருப்பு கட்டடத்தை தரைமட்டமாக்கியதாக லெபனான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பெய்ரூட் தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 66 பேர் காயமடைந்தனர் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தன்னார்வலர்களும் மீட்புக் குழுவினரும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்கள் தேடும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

லெபனானின் சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, காசா மீதான போர் தொடங்கியதில் இருந்து லெபனானில் கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 3,670 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 15,413 பேர் காயமடைந்துள்ளனர்.

மோதலினால் சுமார் 1.2 மில்லியன் மக்கள் அல்லது லெபனானின் மக்கள் தொகையில் கால் பகுதியினர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இஸ்ரேலிய தரப்பில், சுமார் 90 வீரர்களும், சுமார் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)



## ரஷ்ய...

## உலகப்...


### ரஷ்ய...

**(மொஸ்கோ) – ரஷ்யா – உக்... போராக மாற்... செய்கிறது என... சாட்டியுள்ளார்.**

ரஷ்யா – உக்ரைன் இடையே இடம்பெற்று வரும் போரானது 1,000 நாட்களை கடந்து நீடித்து வருகின்றது. இந்நிலையில் உக்ரைனுக்கு பொருளாதார உதவிகள் மட்டுமின்றி, ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்கி வருகின்றது.

இ... யாவ... வல... நாட... தூர... தாக்... ஏவ... ரை... என... பத்... ங்கி...

## கொல்கத்தாவில் தீ விபத்து 10 வீடுகள் எரிந்து நாசம்



(டில்லி)

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள உல்டாங்கா பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தில் குறைந்தது 10 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக இந்திய தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகவல் அறிந்ததும் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்காக ஆறு தீயணைப்பு வாகனங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தீ விபத்திற்கான காரணம் மற்றும் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் இன்னும் மதிப்பிடப்படவில்லை. (நி-8)

## பேஷன் அழகியாக மாறிய 85 வயது மூதாட்டி

### வைரலான புகைப்படங்களால் நடிக்க வாய்ப்பு





(கெய்ரோ)

கிழக்கு ஆபிரிக்காவின் ஜாம்பியாவில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த மார்கரெட் சோளா என்ற 85 வயது மூதாட்டி ஒருவர் பேஷன் அழகியாக மாறி அனைவரையும் திகைப்படைய வைத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மார்கரெட் சோளா என்ற அந்த மூதாட்டியின் பேத்தி நியூயோர்க்கில் "மேக்கப்" கலைஞராக திகழ்கின்றார்.

இந்நிலையில், அவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு தன்னுடைய சொந்த நாடான ஜாம்பியாவுக்கு வருகை தந்து தனது பாட்டியை சந்தித்தார்.

அப்போது பாட்டிக்கு நவநாகரீக உடைகளை விதம் விதமாக அணிவித்தும் புகைப்படங்களை எடுத்துள்ளார்.

குறித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வெளியாகி வைரலாகிய துடன் குறித்த பாட்டிக்கு பிரபல ஹாலிவுட் இணையத் தொடரிலும் நடிக்க வாய்ப்பு வந்துள்ளது.

இந்நிலையில் மூதாட்டியின் பேத்தி இதனை அறிந்து தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## சுவ... 6.2...

(வே... சுவரி... வாழை... மில்லி... டொலர்... கப்பட்... நாட்டுச்... கின்றன...

அ... யோர்... சுவற்றி... ஒட்டப்... பழம் க... ஏலத்தி... ளது.

இத... யாக 8... ஏலம்...


இந்... வைச்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா-உக்ரைன் போரை

# ப் போராக்கும் மேற்கு நாடுகள்!

## ய ஜனாதிபதி சாடல்



ன)

**க்ரைன் இடையிலான போரை உலகப் ற்ற மேற்கத்தேய நாடுகள் முயற்சி என ரஷ்ய ஜனாதிபதி புடின் குற்றம் ர்.**

இப்போரில் ரஷ் யாவின் கை ஓங்கு வதைத் தடுக்க, அந்த நாட்டுக்கு எதிராக நீண்ட தூரம் பயணித்து தாக்கும் திறன் உடைய ஏவுகணையை உக் ரைன் பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா சமீ பத்தில் அனுமதி வழ ங்கியிருந்தது.

அதன்படி உக்ரைன் இராணுவமும், அமெ ரிக்கா மீது நீண்ட தொலைவு செல்லும் திறன் கொண்ட ஏவுக ணைகளை வீசி தாக் கியது. இதற்கு பதிலடி தரும் வகையில் கண் டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ரஷ்யா முதல் முறை யாக பயன்படுத்தியுள் ளது.

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் “இரு நாடுகளுக்கு இடையி லான போரை உலகப் போராக மாற்ற மேற் கத்தேய நாடுகள் முயற்சி செய்கிறது என்வும் ரஷ்யா மீது தாக்குதல் நடத்த ஏவுகணைகளை வழங்கும் நாடுகள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரஷ்யா விற்கு எதிராக ஆயுதங் களைப் பயன்படுத்தும் நாடுகளின் இராணுவ வசதிகளை குறி வைத்து தாக்குதல் நடத்த ரஷ்யாவிற்கு உரிமை உண்டு என வும், சர்வதேச பாது காப்பு அமைப்பை அழிப் பது ரஷ்யா அல்ல, அமெரிக்காதான் என் பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்த விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். (நி-8)

## சுவரில் ஒட்டப்பட்ட ஒரு வாழைப்பழம்

## .2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம்







(வோஷிங்டன்)

சுவரில் ஒட்டப்பட்ட ஒரு ாழைப்பழம் சுமார் 6.2 ல்லியன் அமெரிக்க டாலருக்கு ஏலத்தில் விற் ப்பட்டுள்ளதாக வெளி ாட்டுச் செய்திகள் தெரிவிக் ன்றன.


அமெரிக்காவின் நியூ யார்க் ஏல மையத்தில் வற்றில் டக்ட் டேப் போட்டு ட்டப்பட்ட இந்த வாழைப் ழம் கடந்த புதன்கிழமை லத்திற்கு வந்துள் து.

இதன் ஆரம்ப விலை ாக 800,000 டொலரில் லம் தொடங்கியது.

இந்நிலையில் சீனா வச் சேர்ந்த கிரிப்டோ நாணய தொழிலதிபரான ஜஸ்டின் சன், 6.2 மில் லியன் அமெரிக்க டொலர் கொடுத்து அந்த வாழைப் பழத்தை வாங்கியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதேவேளை இத்தா லியைச் சேர்ந்த பிரபல கைவினைக் கலை ஞரான மொரிசியோ கட்டெலன் என்பவரது கலைப்படைப்படைப்புத் தான் இது எனவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-8)

## ஜோர்தானிலுள்ள இஸ்ரேலிய தூதரகம் அருகே சூடு



(அம்மான்)

ஜோர்தானில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்திற்கு அருகே நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டில் துப்பாக்கிதாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேலும், மூன்று பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு ஆதாரம் மற்றும் அரசு ஊடக அறிக்கைகளை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அம்மானின் ரபியா பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை நோக்கி துப்பாக்கி யால் சுடத் தொடங்கிய துப் பாக்கிதாரி, பொதுப் பாது காப்பின் பின்னணியில் பொலிஸாரால் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார்.

ஜோர்தான் பொலிஸார், துப்பாக்கிதாரியை தாக்குவதற்கு முன், தூதரகத்திற்கு அருகிலுள்ள ஒரு பகுதியை சுற்றி வளைத்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்த னர்.

ஜோர்தானின் 12 மில்லியன் மக்களில், பலர் பாலஸ்தீனிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இஸ்ரேலை உரு வாக்க வழிவகுத்த 1948 போரின் போது இடம் பெயர்ந்தவர்கள் அல்லது ஜோர்தானுக்கு தப்பிச் சென்றவர்கள்.

இந்த நிலையில் இச் சம்பவம் எதனால் ஏற்பட்டது என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் நீடித்தால் மருத்துவரை நாடவும்!

## வைரஸ் காய்ச்சல் குறித்து எச்சரிக்கை

**(கொழும்பு)**


**நாட்டில் பொதுமக்களிடையே வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.**

இதேவேளை காய்ச்சல், சளி, தொண்டை வலி மற்றும் இருமல் ஆகியவை குறித்த காய்ச்சலுக்கான அறிகுறிகள் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிகுறிகள் மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த வைரஸ் காய்ச்சல் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி.விஜேசூரிய மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவும் சிறிய கிருமிகள்.



அவை உயிர்வாழ்வதற்காக மனிதர்களை தாக்கும் வாய்ப்பைத் தேடுகிறது. இதன்போது காய்ச்சல், சளி, இருமல் போன்ற பல்வேறு அறிகுறிகள் மனித உடலில் தோன்றக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(ரி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 200-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 300-320 | 250 |
| தக்காளி | 300 | 350 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 250 | 100-150 | 150 |
| கோவா | 180 | 250 | 250 | 250 |
| கரட் | 100 | 250 | 150 | 250 |
| பூசணி | 100 | 100 | 100 | 160 |
| புடோல் | 120 | 150 | 150 | 160 |
| வாழைக்காய் | 100 | 150 | 50-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 100-140 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 400 | 400 |
| பாகற்காய் | 400 | 650 | 650 | 1000 |
| வெண்டக்காய் | 100 | 150 | 100-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 300 | 450 | 400 | 800 |
| லீக்ஸ் | 200 | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 200 | 300 |
| கறிமிளகாய் | 450 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 60-70 | 200 |
| தேசிக்காய் | 600 | 800 | 400-550 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 80-170 | 120-180 |
| இராசவள்ளி | -- | 650 | 700 | 1200 |
| வெங்காயப்பூ | 400 | -- | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 271



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அறியாமை சுகம்

இந்த உலகத்திலே உண்மையாகவே வேதாந்தம் பேசுபவர்களும் உண்டு. உள்ளுக்குள்ளே வேறமாதிரி இருந்துகொண்டு வெளியிலே வேதாந்தம் பேசுபவர்களும் உண்டு. ஒரு ஆள் இருந்தார். அவர் ஒருகடை வைத்து வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். மகா கஞ்சன். யாருக்கும் எந்த உதவியையும் செய்ய மாட்டார்.

எச்சில் கை என்ன ஈரக் கையைக் கூட உதறமாட்டார். அப்படிப்பட்ட மனிதன். அந்த ஊருக்கு ஒரு முனிவர் வந்துகொண்டிருந்தார். வருடத்திற்கு ஒரு தடவை வருவார். ஒருநாள், இரண்டுநாள் இருப்பார். பின்பு போய் விடுவார்.

அந்த முனிவர் வரும் போதெல்லாம். இந்த ஆள் எழுந்து ஓடிப்போய் அவரை வரவேற்பான். மிகவும் பெரிய வேதாந்தி மாதிரி அவரிடம் பேசிக்கொண்டிருப்பான்.

"காயமே இது பொய். வெறும் காற்றடைத்த பை " என்பான். "தர்மம் தலை காக்கும்" என்பான். பணம் என்ன சார் பணம். இன்றைக்கு ஒருத்தன் கையிலே இருக்கும். நாளைக்கு ஒருத்தன் கையிலே இருக்கும்! எல்லாம் மாயம்! எனக்குத் தான் இன்னும் இந்த சம்சார பந்தத்திலேயிருந்து விடுபடுவதற்கு நேரம் வரவேயில்லை என்பான்.

அந்த முனிவரும் இந்த ஆள் இப்படி சொல்லுவதைக் கேட்டவுடன் ஏன் அப்படிச் சொல்கிறாய். இப்ப கூட நீ சரி என்று சொல்லு உனக்கு தீட்சை கொடுத்து இதிலேயிருந்து விடுபடும் ஞானத்தைப் போதிக்கிறேன் என்பார்.

உடனே அந்த ஆள் என்ன சொல்வான் தெரியுமா?

ஐயோ சாமி இப்ப அது எப்படி முடியும்? பிள்ளைகளெல்லாம் சின்னஞ் சிறுசுகள். அவர்களுக்கெல்லாம் ஒரு கல்யாணம் காட்சியென்று செய்து கடமையை முடித்து விட்டால் நீங்கள் சொல்லுற படி செய்திடலாம் என்பான். சரி என்று முனிவர் போய்விடுவார். அடுத்த வருடம் வருவார். இவன் வழக்கம் போல வேதாந்தம் பேசுவான்.

சரி தீட்சை கொடுக்கிறேன் வா என்றால்.. பேரன் பேர்த்தியைப் பார்க்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று இருக்கிறது அது முடிய வேண்டும் என்று தயங்க ஆரம்பித்து விடுவான்.

எல்லாம் சொல்லுவான். ஆனா குடிப்பதற்கு தண்ணீர் கூட தரமாட்டான். நிறைய வருடம் கழித்து மறுபடி ஒரு நாள் அந்த ஊருக்கு முனிவர் வந்தார். இவன் கடைக்கும் வந்தார்.

அங்கே கல்லாவிலே நம்ம ஆள் இல்லை. அவன் பிள்ளை தான் உட்கார்ந்திருந்தான். அப்பாவைப் போலவே பிள்ளையும் எழுந்து ஓடிவந்து முனிவரை வரவேற்றான்.

அப்பா எங்கே என்று கேட்டார் முனிவர். ஐயோ அதையேன் கேக்கிறீர்கள் சாமி. உங்களிடம் தீட்சை வாங்கி இந்த சம்சார பந்தத்திலேயிருந்து விடுதலை பெற வேண்டும் என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். அது நிறைவேறாமலேயே போய்ச்சேர்ந்து விட்டார்.போன மாதம் ஒருநாள் திடீரென்று நெஞ்சு வலிக்குது என்றார். அவ்வளவு தான் பொட்டென்று போயிட்டார் என்று புலம்பினான் பையன். இதைக் கேட்டதும் முனிவர் சிரித்தார். அவன் எங்கடா போவான். உன் அப்பன் எங்கேயும் போகல. இதோ வாலை ஆட்டிக்கிட்டு உன் காலடியிலே இருக்கிறான் பார் என்று சொல்லி அங்கே நின்று கெண்டிருந்த ஒரு நாயைச் சுட்டிக் காட்டினார்.

என்ன சாமி சொல்கிறீர்கள் என்று ஆச்சரியமாகக் கேட்டான் பையன். உடனே முனிவர் அந்த நாயினுடைய தலையிலே தட்டி பேசுடா என்றான். உடனே நாய் வேதாந்தம் பேச ஆரம்பித்து விட்டது. காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை என்று முனிவர் சொன்னார் .அடேய் இப்பவும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை.

நீ விரும்பினால் சொல்லு. உனக்கு தீட்சை கொடுத்து என் பின்னாலேயே அழைத்துக் கெண்டு போய் உனக்கு ஞானத்தை போதிக்கின்றேன் வருகிறாயா என்று கேட்டார்.

உடனே அந்த நாய் சொல்லியது ஐயோ அதையேன் கேக்கிறீர்கள் சாமி. நான் உண்ணாமல் ஏராளமான சொத்து சேர்த்து வைத்துவிட்டேன். என் பிள்ளைகள் அதனுடைய பெருமை தெரியாமல் இரவு கதவைத் திறந்து விட்டு தூங்கிவிடுவார்கள். அதனாலே இப்படி நாயாய் பிறந்து இரவு பகலாக சுத்தி சுத்தி வந்து காவல் காத்துக் கொண்டு இருக்கின்றேன். இப்ப எப்பிடி சாமி வரமுடியும்? என்று கேட்டது.

அறியாமையிலேயே சுகம் கண்டு இப்படி இருக்கிற ஆட்களுக்கு எப்படி விடுதலை கிடைக்கும் என்று கேட்கிறார். தசாவதானி திருக்குறள் பெ.இராமையா.

அவர் கேட்பதும் நியாயம் தானே.

இந்தக்காலத்துப் சிறுவன் ஒருவன் அப்பாவிடம் சொன்னான். அப்பா இன்றைக்கு நான் ஒரு ரூபாவை மிச்சப்படுத்தினேன் என்றான். அப்படியா? என்ன செய்தாய் என்று கேட்டார் அப்பா.

பேருந்திலே போகாமல் அதன் பின்னால் ஓடி வந்தேன். ஒரு ரூபாய் மிச்சம் என்றான் பையன்.

அடப்பாவி ஒரு முச்சக்கர வண்டிபின்னால் ஓடி வந்திருந்தால் 10 ரூபா மிச்சமாயிருக்குமே.வீணாக்கிவிட்டாயே என்றாராம் அப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




Botanical name- Alangium salvifolium
Family- Alangiacea
Engl-sage-leaved tree

## அழிஞ்சில் பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்




2900 வருடங்கள் பழைமையான, புதுமையான மருத்துவக் குணங்கள் நிறைந்த மரம். பல கோயில்களில் தல விருட்சமாக இருக்கும். வறட்சியை தாங்கி வளரக்கூடியது. நெய்தல், மருதம், குறிஞ்சி நிலங்களில் வளரும்.

ஒரழிஞ்சில், இறங்கு அழிஞ்சில் என இரு வகையுண்டு. இதன் பழங்கள் போசனைக் கூறுகள் நிறைந்த, மருத்துவ குணங்கள் நிறைந்த மரமாகும். இதை விட இதன் பழ விதைகளுக்கு ஒரு சிறந்த ஆன்மிகத் தன்மையுமுண்டு. அதாவது இதன் பழங்கள் கனிந்து மரத்திலிருந்து விழுந்த பின்பு அதன் விதைகள் மீண்டும் மேலே சென்று மரத்தில் ஒட்டிக்கொள்ளும். எந்த ஈர்ப்புசக்தியால், எதனால் என்றும் இது வரை புரிந்து விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஆன்மிக ரீதியாக பார்த்தால் பரமாத்மாவில் இருந்து பூமிக்கு வந்த ஆன்மா ரீதியான பழங்கள் உலர்ந்த பின்பு மீண்டும் அதன் விதைகள் பரமாத்மாவிடம் இணைவதை குறிப்பிடுகிறதா என்ற அதிசயமும் உண்டு. இதை ஆதி சங்கரர் இக் கனியை எடுத்துக் காட்டாக குறிப்பிட்டுள்ளார். இதன் குறியீட்டைச் சிவானந்த லகரியின் சுலோகங்களில் காணலாம்.

இப் பண்புகள் நிறைந்த பழங்களை வருடத்தில் ஒரு தடவையாவது சுவைத்துச் சாப்பிட வேண்டும். ஆதலால் எத்தனையோ கோவில்களில் வேறு இடங்களில் இப் பழமரங்கள் கனிகளுடன் காணப்படும் போது கூட அது எமது பிரதேச மக்களுக்கு அது புலப்படுவதில்லை. உடலிற்கு வலிமை சேர்க்கக் கூடிய பல நோய்களை நீக்கக் கூடிய, நோய்கள் வராமல் தடுக்கக்கூடிய பழமாகும். சிறுநீரக கற்கள், பித்தக் கற்களை நீக்கக் கூடிய சிறந்த பழமாகும். அத்துடன் இராஜ உறுப்புகளை (இனப்பெருக்க) வலுப்படுத்தக் கூடியது.

மிகவும் குளிர்ச்சியை கொடுக்கக் கூடிய பழங்கள். இப் பழங்களைச் சாப்பிட்டு வரும் போது குடற் புண்களை ஆற்றும் தன்மையும் உண்டு.

சித்த மருத்துவத்தில் பித்தம் அதிகரித்து வரக் கூடிய நோய்களை ஆற்றும் தன்மை உண்டு. இப் பழங்கள் வருடத்தில் ஒரு தடவை மட்டுமே கிடைக்கக் கூடியது. இப் பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து C காணப்படுவதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றலும் உண்டு. இப் பழத்தில் இரும்புச் சத்து, பொட்டாசியம், கல்சியம் சத்துக்களும் உண்டு. இதில் முக்கியமான வேதியற் சத்துக்களான Ankorine, Alangine, Alangicine, salsoline போன்ற இரசாயனச் சத்துக்கள் புற்றுநோய் வராமல் தடுப்பதுடன் மலட்டுத் தன்மையை நீக்கக் கூடியதானவும் (Anti Fertility) உள்ளது சிறப்பம்சமாகும். இதில் பொட்டாசியம் சத்து காணப்படுவதால் இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்கக் கூடியது. தொண்டையில் ஏற்படும் வரட்டு இருமலுக்கும் இப் பழங்களை சாப்பிடலாம். உயிர்ச்சத்து C உள்ள பழங்களுக்குள் அழிஞ்சில் பழமும் முக்கியமானது.



இப் பழத்தை சாப்பிட்டு வர தோல் நோய்களும் ஏற்படாது. தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் காணப்படும். இப் பழத்தில் சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகள் சாப்பிடலாம். அத்துடன் உயிர்ச்சத்து C காணப்படுவதால் நீரிழிவு நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு ஆற்றலையும் அதிகரிக்கச் செய்யும். ஒரு நாளையில் எல்லா வகையான பழங்களையும் சாப்பிடுவதை தவிர்த்து ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு வகை பழங்கள் சாப்பிடுவது சிறந்ததாகும். பழங்களில் பொதுவாக மா போசனைக் கூறுகள் நுண் போசனைக் கூறுகள் எல்லாமே கலந்து காணப்படுவதால் ஆரோக்கியத்திற்கு சிறந்தவையாகும். பழங்களிலுள்ள காபோவைதரேற்று ஆனது Fructose, glucose ஆக உடனே மாறக் கூடிய ஆற்றல் உள்ளதால் உடனடியாக சக்தியை கொடுக்கும். தன்மையும் ஏற்படும். எனவே நீரிழிவு நோயாளிகள் மட்டும் சர்க்கரை உயர்த்தும் திறன் குறைந்த அழிஞ்சில் பழம், கொய்யாப்பழம், அப்பிள், நாரத்தை, தோடை போன்றவற்றை பயன்படுத்தலாம். பழங்களை யூசாக அடித்து குடிப்பதை தவிர்த்து எல்லோரும் பழமாக கடித்து சாப்பிடும் போது நார்ச்சத்து நிறைவாக கிடைக்கும். இதனால் குடலின் செயற்பாடுகள் சீராகி சமிபாடு என்பன சீராக அமையும். பழங்களை சாப்பாட்டு இடை வேளைகளில் சாப்பிடுவது சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 639





அவருடன் பகிரங்கமாக முரண்படப் பழுவேட்டரையர்களும் தயங்குகிறார்கள்" பழுவேட்டரையர் கள் குற்றம் உள்ள நெஞ்சினர். அவர்கள் பயப்படுவார்கள் நான் ஏன் பயப்பட வேண்டும்?"

"இளம் பிராயத்திலிருந்து என் தந்தையின் உற்ற தோழர் அவர். முதன் மந்திரிக்குச் செய்த அவமரியாதை சக்கரவர்த்திக்கும் எனக்கும் செய்த அவமரியாதையாகும்."

"அப்படியானால், அவருடைய நம்பிக்கைய்ய நான் பெறுவதற்கு வழியையேனும் சொல்லுங்கள்."

"முதன் மந்திரி, காஞ்சிக்கு மிகவும் நம்பிக்கையான ஒருவரை அனுப்ப விரும்புகிறார். உம்மை அனுப்பலாம், நம்பி அனுப்பலாம் என்று நான் உறுதி அளித்திருக்கிறேன்."

"தேவி! காஞ்சிக்கு என்னை அனுப்பாதீர்கள்! என் மனத்திற்குள் ஏதோ ஒரு குரல், 'காஞ்சிக்குப் போகாதே!' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது."

அது ஒருவேளை பழுவூர் இளைய ராணியின் குரலாயிருக்கலாம் அல்லவா? இல்லவே இல்லை! தங்களுடைய சொல்லுக்கு மாறாக அந்த விஷ நாகத்தின் குரலை நான் கேட்பேனா?

"ஐயா! பழுவூர் இளைய ராணியைப் பற்றி இனி எந்தச் சமயத்திலும் அப்படியெல்லாம் பேசாதீர்கள்!" இது என்ன? ஏன் இந்தத் திடீர் மாறுதல்?"

"ஆம் என் மனம் அவள் விஷயத்தில் அடியோடு மாறிவிட்டது. நீர் இலங்கையிலிருந்து கொண்டு வந்த செய்தியைக் கேட்ட பிறகு."

அப்படியானால் இனி நான் பழுவூர் இளைய ராணியிடமும் பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டியதுதானோ? ஆம்!

"அவள் பயபக்தியுடன் பூஜை செய்யும் கொலை வாளை என்னிடம் கொடுத்து, 'இன்னாருடைய தலையைக் கொண்டு வா!' என்று சொன்னாலும் கொண்டுவர வேண்டியதுதானோ?"

குந்தவை தேவியின் உடம்பு நடுங்கிற்று. மறுமொழி கூறியபோது அவளுடைய குரலும் நடுங்கிற்று.

"பழுவூர் ராணியிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் அவள் பேச்சைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவள் எத்தகைய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்பது அவளுக்கே தெரியாமலிருக்கலாம் அல்லவா?"

"அப்படித்தான் அவளும் கூறினாள். 'நான் எதற்காக இந்தக் கத்தியைப் பூஜை செய்து கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை' என்றாள்."

இதைக் கேட்ட இளவரசி இன்னும் அதிகமாக நடுங்கிய குரலில் இந்தச் சோழர் தொல்குடியைத் தெய்வம் தான் காப்பாற்ற வேண்டும் என்றாள்.

"காப்பாற்றுகிற தெய்வம் இந்த ஏழையைச் சாதனமாக வைத்துக்கொண்டு காப்பாற்றட்டும்" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! நானும் அவ்வாறுதான் நம்பியிருக்கிறேன். நீர் காஞ்சியிலிருந்து திரும்பி வந்ததும் மறுபடி ஒரு தடவை இலங்கைக்குப் போக வேண்டும். அந்த ஊமைத் தாயை எப்படியாவது இங்கே அழைத்து வரவேண்டும்"

"அவளை அழைத்து வருவது சுழிக்காற்றைக் குடத்தில் அடைத்துக் கொண்டு வருவது போலத்தான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உடைவாள்

முல்லா ஒரு தடவை அயல்நாட்டிற்கு செல்ல வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் எவ்வளவு தொலை தூரமாக இருந்தாலும் கழுதையின் மீது சவாரி செய்து தான் செல்ல வேண்டும். முல்லா நீண்ட தொலைவு பயணம் புறப்பட போகும் செய்தியை அறிந்த அண்டை வீட்டுக்காரர் திருடர் பயம் காட்டில் அதிகம் இருக்கும் என்று மிகவும் கவலைப்பட்டார். ஆதலால் முல்லாவுக்கு வழியில் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று அண்டை வீட்டுக்காரர் உடைவாள் ஒன்றை அன்போடு கொடுத்து அனுப்பினார். முல்லாவும் அதை மரியாதையுடன் வாங்கி இடுப்பில் கட்டிக் கொண்டு பிரயாணத்தை தொடங்கலானார்.

ஒரு காட்டு வழியாக முல்லா கழுதைமீது அமர்ந்து சென்று கொண்டிருந்தபோது அவரை நான்கு திருடர்கள் வழி மறித்துக் கொண்டனர். கிழவனாரே, உம்மிடம் உள்ள விலை உயர்ந்த பொருளைக் கொடுத்து விடும். உம்மை உயிரோடு அனுப்பி விடுகிறோம் என்று திருடர்கள் கேட்டனர். என்னிடம் காசு பணமெல்லாம் எதுவும் கிடையாதே நான் ஒரு பரம ஏழை என்றார் முல்லா. அப்படியானால் உம்முடைய கழுதையை எங்களிடம் ஒப்படைத்து விட்டு நடந்து செல்லும் என்றனர்.

கழுதை இல்லாமல் இந்த வயதான காலத்திலே என்னால் நடந்து செல்ல இயலாது என்று நினைத்த முல்லா ஒரு யோசனைச் செய்தார். என்னிடம் ஒரு உடைவாள் இருக்கிறது கழுதைக்குப் பதிலாக அதைப் பெற்றுக் கொண்டு என்னை விட்டு விடுகிறீர்களா? என்று கேட்டார் முல்லா. அந்த உடைவாள் விலை மதிப்புள்ள அருமையான வாள். அதனை வாங்கிப் பார்த்த கள்வர்கள் தங்களுடைய தொழிலுக்கு பயன்படும் என்று உடைவாளைப் பெற்றுக் கொண்டு முல்லாவை கழுதையுடன் தொடர்ந்து போக அனுமதித்தனர். பிரயாணத்தை முடித்துக் கொண்டு முல்லா ஊர் திரும்பினார்.

வீட்டுக்கு வந்த முல்லாவை அண்டை வீட்டுக்காரர் மகிழ்ச்சியுடன் வரவேற்று பிரயாணம் எப்படி இருந்தது என விசாரித்தார். எதிர் பார்த்ததைவிட நன்றாக இருந்தது என்றார் முல்லா. வழியில் கள்வர் தொல்லை ஏதாவது ஏற்பட்டதா? என அண்டை வீட்டுக்காரர் கேட்டார். அதை ஏன் கேட்கிறீர்கள். நான்கு திருடர்கள் வந்து என்னை வளைத்துக் கொண்டார்கள். நல்ல வேளையாக நீங்கள் கொடுத்த உடைவாள் இருந்தது.

அதை உபயோகித்து நிலைமையை சமாளித்து விட்டேன் என்றார் முல்லா. இனி உமக்கு உடை வாள் தேவைப்படாது. அதனால் கொடுத்து விடுங்கள் என்றார் அண்டை வீட்டுக்காரர். அதைத் தான் அவர்களிடம் கொடுத்து விட்டேனே என்றார் முல்லா. காட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியை முல்லா விரிவாக எடுத்துச் சொன்னார். அண்டை வீட்டுக்காரருக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

நீதி : ஒருவனுக்கு தேவையானதைக் கொடுத்து விட்டால் அவன் நம்மை ஒன்றும் செய்ய மாட்டான். அதே சமயம் பலம் மிக்கவரிடம் பலம் இல்லாதவன் மோதி ஜெயிக்க முடியாது. ஆனால் பலம் இல்லாதவன் தன் அறிவால் ஜெயிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்.
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெள்ள அனர்த்தத்தின் போது இடுக்கண் களையுங்கள்

கடந்த சில நாட்களாகக் கொட்டித் தீர்க்கும் கனத்த மழை காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல குடும்பங்கள் நலனோன்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

சில குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்துக்குத் தங்களின் வீடுகளைப் பறிகொடுத்துள்ளன.

இவர்களுக்கான நிவாரணப் பணிகளை அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேற்கொள்ளுமாயினும் அவை போதுமானதாக இருக்க மாட்டாது.

எனவே வெள்ள அனர்த்தத்துக்கு ஆளாகிய மக்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்குப் பொது அமைப்புகளும் பொது மக்களும் முன்வர வேண்டும்.

இதுதவிர, எதிர்வரும் நாட்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே காற்று, மழை ஆகிய அனர்த்தங்களுக்கு ஆளாகக் கூடிய இடத்து மக்கள் விழிப்பாக இருப்பது அவசியம்.

அதிலும் பாரிய மரங்கள், பழைய கட்டடங்கள் தொடர்பில் அந்தந்தப் பகுதி அரச நிர்வாகமும் பொதுமக்களும் பொது அமைப்புகளும் சேர்ந்து சில முன்னாயத்தங்களை செய்தாக வேண்டும்.

தேவை ஏற்படின் பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு ஈடுகொடுக்க முடியாத பாரிய மற்றும் முதிர் மரங்களை இனங்கண்டு அவற்றை தறித்துப் பாதுகாப்பை உறுதி செய்வது கட்டாயமானதாகும்.

அதேவேளை இன்று நவம்பர் 25ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகின்றது.

கடும் மழை பெய்யக்கூடிய இந்த வேளையில், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்குப் பாதுகாப்பாகச் சென்று வருவதற்கு அனைவரும் உதவ வேண்டும்.

குறிப்பாக மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்குச் செல்லும்போது வாகனங்கள் அவர்களுக்கு உதவி செய்ய முடியும்.

இங்கு வாகனங்கள் உதவுவதென்பது பல வழிகளில் செய்யக்கூடியதாகும்.

அதிலும் பரீட்சைக்குச் செல்கின்ற மாணவர்கள் நடந்துபோகும்போது, வீதியில் வருகின்ற வாகனங்கள் மழை நீரை அடித்துச் சிதற, மழை வெள்ளம் மாணவர்களின் சீருடைகளைப் பழுதாக்கிவிட, சம்பந்தப்பட்ட மாணவர்கள் எதுவும் செய்ய முடியாமல் அதிர்ந்து போவர்.

ஆகையால் அனைத்துத் தரப்பினரும் மிகவும் நிதானமாகவும் பொறுப்புடனும் நடந்து, உயர்தர மாணவர்களின் பரீட்சை எந்தவித இட்டல் இடைஞ்சல்களுமின்றி நடப்பதற்கு உதவுது அவசியம்.

அதிலும் பரீட்சை நிலையங்களில் மழை ஒழுகுவது, பரீட்சை மண்டபங்கள் இருட்டாக இருப்பது, கடும் மழை நேரத்தில் மின்சாரம் தடைப்படுவது போன்றவற்றிலெல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவதும் கண்ணும் கருத்துமாக இருப்பதும் கட்டாயமானது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் சீராக நடைபெறுவதையும் நேர காலத்துடன் மாணவர்கள் பரீட்சை மண்டபங்களுக்குச் செல்வதையும் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் பெற்றோர்கள் உறுதி செய்ய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கை அனர்த்தம் ஏற்படும்போது அது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகவல்கள் வழங்குவதற்கான தொடர்பாடல்களை அனைவரும் அறிந்து வைத்திருப்பதும் நன்மை தரும்.

### தமிழ் – முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசின் முயற்சிக்கு பூரண ஆதரவு

### மனந்திறந்தார் ராஜித சேனாரத்ன

தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி நாட்டின் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் செல்லும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தயாராக இருக்கிறோம்.

இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை என்ற கொள்கையை மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பகாலத்தில் எடுத்திருந்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடி இருக்காது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கை விளக்க உரையில், இனவாதத்தால் இரத்த ஆறு ஓடிய வரலாறுகொண்ட இந்த நாட்டில், மீண்டும் அந்த நிலைக்கு இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கூற்றை வரவேற்கிறேன். நாட்டில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு முக்கியமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி 1980 காலப்பகுதியில் முன்னெடுத்துவந்த புரட்சியினால் நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் அன்று கடைப்பிடித்திருந்தால், நாட்டில் இரத்த ஆறு ஓடி இருக்காது. வடக்கில் பிரிவினைவாத யுத்தம் ஏற்பட்டிருக்காது.

என்றாலும் அவர்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ள நிலையில் 35 வருடங்களுக்குப் பின்னராவது இந்த உண்மை அவர்களுக்குப் புரிந்திருக்கிறது. அதனையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காக நாங்கள் வடக்குக்குச் சென்று போராடி இருக்கிறோம். அதே போன்று முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம்.

தேசியப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையில் நாங்கள் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அதனால் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் முன்னெடுக்கும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயாராக இருக்கிறோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். நாங்கள் ஒருபோதும் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை. நான் மாத்திரமல்ல, எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் அரசியல் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை.

ரணில் விக்கிரமசிங்க பிரபல்ய அரசியல் செய்யவில்லை. அவர் எப்போதும் அறிவுபூர்வமான தீர்மானங்களே எடுத்து வந்தார். அதனால் அநுகுமார திஸாநாயக்கவும் பிரபல்ய அரசியல் செய்வதைவிடுத்து, அறிவுபூர்வமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தத் தேர்தலில் வடக்கு மக்களின் மனதை வெற்றிகொள்ள தேசிய மக்கள் சக்திக்கு முடியுமாகி இருக்கிறது. இது வரலாற்று வெற்றியாகும். மக்கள் விடுதலை முன்னணி தனது இனவாத, மதவாதத்தை நிராகரிப்பதற்கு வடக்கு மக்களின் ஆதரவும் காரணமாக இருக்கலாம்.

அதனால் தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து, அதனை நிறைவேற்றும் வகையில் அரசாங்கத்தின் பயணம் இருக்க வேண்டும் என்றார். (ந-7)

# இந்தியாவிடம் நேசம்; சீனாவிடம் அன்பு
# இதுவே எமது அரசின் நிலைப்பாடு

### அமைச்சர் சந்திரசேகரன் விளக்கம்

அயல் நாடு என்ற வகையில் இந்தியாவை நேசிக்கின்றோம். அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார மூலோபாயத்தின் அடிப்படையில் எமது கொடுக்கல் - வாங்கல்களில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் எனத் தெரிவித்த கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், உலகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற நட்பு நாடு என்ற வகையில் சீனா மீது அன்பு உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தொடர்ந்தும் தெளிவுபடுத்துகையில்,

இலங்கையின் அயல் நாடு இந்தியா. தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார மூலோபாயத்தின் அடிப்படையில் எமது கொடுக்கல் - வாங்கல்களில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இதனைப் பகிரங்கமாகவே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு நாங்கள் வெளிப்படையாகக் கூறும் போது, அதனை ஏற்காமல் இல்லை. நீங்கள் சீனாவுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகக் கருதினால், அவ்வாறு எதுவும் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

அயல் நாடு என்ற வகையில் இந்தியாவை நேசிக்கின்றோம். மறுபுறம் உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடாக சீனா உள்ளது. வறுமையை குறைத்துள்ள நாடாகவும் உள்ளது.

எனவே நட்பு நாடு என்ற வகையில் சீனா மீது எமக்கு அன்புள்ளது. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அனைத்துத் தொழிற்துறைகளிலும் முன்னேற்றம் கண்ட நாடாக உள்ளது. எனவே எந்த நாட்டின் உறவையும் எம்மால் நிராகரிக்க முடியாது.

எனவே, அனைத்துத் தரப்புகளையும் நாட்டுக்குப் பயனுள்ளதாக உள்வாங்கும் பக்குவமுள்ள ஆட்சியாகவே தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் உள்ளது.

அந்த வகையில், சீனாவை ஆதரிப்பதும் ஆதரிக்காமல் விடுவதும் எமது நிலைப்பாட்டைப் பொறுத்ததாகும். இருப்பினும் சீனா குறித்த பிரச்சினைகள் தொடர்பில் எமது அரசாங்கம் நீண்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறது. வெகுவிரைவில் தெளிவான விளக்கத்தை அறிவிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ந-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2024
“குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்!”
-தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

### இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த

# 330 கிலோ கேரளக் கஞ்சாவுடன் மூவர் தமிழகத்தில் கைது

ஆந்திராவில் இருந்து தஞ்சாவூர் வழியாக இலங்கைக்குக் கஞ்சா கடத்த முயன்ற மூவரை தஞ்சாவூர் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இதன்போது, கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 3 படகுகளும், 330 கிலோ கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அருகே முடச்சிக்காடு என்ற இடத்தில் கொள்கலன் லொறிக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

லொறியின் உரிமையாளர், லொறியின் சாரதி உட்பட மூவர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் லொறி, கார் மற்றும் போதைப் பொருட்களை இலங்கைக்குக் கடத்துவதற்காக வைத்திருந்த மூன்று ஃபைபர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு அமைய உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும்

## மருத்துவர் அர்ச்சுனாவின் செயற்பாடு குறித்து 'கபே' அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு அமைவாக உறுப்பினர்கள் நடந்துகொள்வது இன்றியமையாதது என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் கேள்விக்குரிய வகையில் நடந்து கொள்வதற்காக மக்கள் உறுப்பினர்களை தெரிவு செய்வதில்லை எனவும் அந்த அமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து சுயேச்சைக் குழுவின் கீழ் இவ்வருடம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இராமநாதன் அர்ச்சுனா முதல் நாளிலேயே சர்ச்சைக்குரிய வகையில் நடந்துகொண்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதற்கு அவர் பாரம்பரியமாக எதிர்க்கட்சித் தலைவருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து பல்வேறு காணொளிகளை சமூக வலைதளங்களில் வெளியிட்டதுதான் காரணம் என குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இராமநாதன் அர்ச்சுனாவின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் சிவில் சமூக ஆர்வலர்கள் குழுவொன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு அமைய உறுப்பினர்கள் நடந்து கொள்வது இன்றியமையாதது என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, புதிய எம்.பிக்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வும் இன்று முதல் நடைபெறவுள்ளது.


பாரம்பரியமாக புதிய பாராளுமன்றம் தொடங்கும் வேளையில் நடைபெறும் இந்த மூன்று நாள் செயலமர்வில், பாராளுமன்ற உறுப்பினரின் பங்கு, பாராளுமன்ற சிறப்புரிமை, பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றும் செயல்முறை, பாராளுமன்றக் குழு செயற்பாடுகள் குறித்து உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் அரசியலமைப்பின் விதிகள், மேலும், மின்னணு வாக்குப்பதிவு முறையைப் பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களிப்பதற்கான நடைமுறை அமர்வும் நடத்தப்படும்.

தொடர்ந்து ஊழல் தடுப்புச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தொடர்பான சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்தும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்" என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# கட்சிப் பணிகளிலிருந்து ஓய்வு

## ரில்வின் சில்வா தீர்மானம்



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா இதுவரை தான் வகித்து வந்த பதவி மற்றும் பொறுப்புக்களிலிருந்து விடுபடத் தீர்மானித்துள்ளார்.

நீண்டகாலமாக கட்சிக்காக பணியாற்றிய நிலையில், மற்றுமொருவருக்கு வாய்ப்பு வழங்கும் நோக்கில் இந்த முடிவை அவர் எடுத்துள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவருக்கு பதிலாக பரிந்துரைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட உறுப்பினர்களில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பெயர் முதலிடத்தில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சிக்காக நீண்ட காலம் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய நிலையில், பாரியதொரு வெற்றியை பெற முடிந்துள்ளதாக ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அந்தப் பதவிகளிலிருந்து விலகி ஓய்வெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் கட்சித் தகவல் தெரிவிக்கின்றன.

எனினும் அறுதிப்பெரும்பான்மை பலத்துடன் சமகால அரசாங்கம் ஆட்சியைக் கைப் பற்றியுள்ளது.

இந்நிலையில் அனுபவம் வாய்ந்த ஒருவரான ரில்வின் சில்வாவின் ஆதரவு எப்போதும் கட்சிக்கு தேவை என சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டு மகத்தான வெற்றியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# தண்ணிமுறிப்புக்குளம் முன்னாயத்த பணிகள் தீவிரம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணிமுறிப்பு குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்காத வகையில் அதனைப் பாதுகாக்கும் முன்னாயத்த ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது.

தண்ணிமுறிப்பு குளத்தின் அணைக்கட்டு உள் பக்கமாக சில இடங்களில் அரிப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து அணைக்கட்டு, குளத்தை பாதுகாப்பதற்காக தற்காலிகமாக மண் மூடைகள் போடப்பட்டு, பாதுகாப்பு வேலி அமைக்கும் வேலைத்திட்டத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் இராணுவத்தினரோடு இணைந்து பாதுகாக்கும் நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர்.

இக் குளமானது 21 அடி வரை நீரை சேமிக்க கூடியதாக இருக்கின்ற நிலையில் தற்போது 14.6 அடி வரை நீர் மட்டம் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8-299)

# மருத்துவர்களுக்கான வரிச்சலுகை; ஆராயுமாறு கோரிக்கை

(கொழும்பு)

மருத்துவர்களுக்கு வரிச்சலுகை வழங்குவது தொடர்பில் அவசரமாக ஆராயுமாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவிடம் அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளை அமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்த போதே, இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர், பிரதி யமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி களுடனான இந்தச் சந்திப்பில், தமது செயற்குழு உறுப்பினர் கள் பங்கேற்று சுகாதாரத் துறைக்குள் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரை யாடியதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் சம்மில் விஜேசிங்க தெரிவித்தார்.

பெரும்பாலான ஆலோசகர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் நிதி காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நிலையில், மருத்துவத் துறையில் மனித வள வெற்றி டங்கள் குறித்தும் கலந்துரையாடியதாக விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எனவே நாட்டிற்குள்ளேயே மருத்துவர்கள் பயிற்சி செய்வ தற்கான ஆர்வத்தைத் தூண் டும் வகையில் அரசாங்கம் ஒரு பொறிமுறையை அமைக்க வேண்டும்.

மருத்துவர்களின் நிதிச் சிக்கல்களை மேம்படுத்த குறு கிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டங்களை அமைப்பது இதில் அடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு சாதகமாக பதிலளித்த சுகாதார அமைச்சர், உடனடி தீர்வு காணக்கூடிய விடயங்களுக்கு முன்னுரிமை அளித்து எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தினூடாக நிவா ரணங்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக மருத்துவர் விஜேசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர்கள் மட்ட உடன்பாட்டை எட்டியிருப்பதால், பணம் செலுத் தும் வரித் திட்டத்தில் திருத்தம் செய்வது குறித்து அவர்கள் தற்போது ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு புதிய தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பிரிவை தொடர்பு கொள்ள புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 011 288 7973 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தின் ஊடாக, மிக வேகமாக செயற்படும் பொலிஸ் ஊடகப் பிரிவை இனிமேல் தொடர்புகொள்ள முடியும்.

பொலிஸ் ஊடகப் பிரிவு பத்தரமுல்ல சுஹுருபாய கட்டடத்தின் 14 ஆவது மாடியில் நிறுவப்பட்டுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது. (நி-8)

# கட்சி செயற்பாடுகளிலிருந்து விலக மைத்திரி முடிவு

(கொழும்பு)

இலங்கை சுதந்திர கட்சியின் செயற்பாடுகளில் இருந்து விலகுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு கடிதம் மூலம் அவர் அறிவிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது சுதந்திரக் கட்சியின் உரிமை தொடர்பில் நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அந்த வழக்குகளில் மைத்திரிபால சிறிசேனவும் ஒரு தரப்பாக உள்ளது.

ஆனால் அவரது புதிய முடிவின் மூலம் கட்சியை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு முன்னாள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் என அறியமுடிகிறது.

இதேவேளை அண்மையில் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் மைத்திரியின் மகன் தஹாம் சிறிசேன பொலநறுவை மாவட்டத்தில் சுயேட்சையாக களமிறங்கி படுதோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப்...

பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

குறித்த பரீட்சையானது அடுத்த மாதம் 20ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாகவும் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டில் தற்சமயம் கடும் மழையுடனான அசாதாரண சூழ்நிலை நிலவுகின்றமையால் பரீட்சார்த்திகள் நலன்கருதி இடர்முகாமைத்துவத் திணைக்களமும் பரீட்சைகள் திணைக்களமும் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளன.

அதன் பிரகாரம் பரீட்சார்த்திகள் அனர்த்தங்களுக்கு முகம்கொடுப்பின், பரீட்சை நிலையங்களைச் சென்றடைவதில் தடங்கல்கள் ஏற்படின், துரித இலக்கமான 117 மற்றும்ஒருங்கிணைந்த அவசர செயற்பாட்டு இலக்கமான 076 311 7117 என்ற இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் துரித இலக்கமான 1911க்கு அழைப்பினை மேற்கொள்ள முடியும்என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## கடல் கொந்தளி...

உயர்வாகவும் காணப்படுவதுடன் குறித்த பகுதிகளில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

எனவே மறு அறிவித்தல் வரை மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடற்றொழில் மற்றும் கடற்பயணங்களைத் தவிர்க்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-7)

## வவுனியா...

துஷ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் கடந்த 19ஆம் திகதி முதல் சிறைவைக்கப்பட்டிருந்தார்.

எதிர்வரும் 3ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற இருந்த நிலையில் குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் சிறைக் காவலர்களால் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதில் நீதவான் த.திருஅருள் சிறைச்சாலைக்குச் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், விசாரணைகளையும் நடத்தியிருந்தார். அத்துடன் வவுனியா வைத்தியசாலைக்கும்சென்று சடலத்தைப் பார்வையிட்டதோடு சடலத்தை சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்த உத்தரவிட்டார்.

குறித்த நபர் கொல்லப்பட்டாரா? அல்லது தவறான முடிவெடுத்து மரணித்தாரா? என்ற கோணத்தில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,250)

## வடக்கு...

புற்றுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதிலும் குறிப்பாக வட மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் 7,025 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 29 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 365 பேரும், மன்னார் மாவட்டத்தில் 7,854 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 399 பேர் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ந-7)

## ஏனைய...

தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்துள்ளது. அத்தேர்தலின் முடிவுகளை நாம் பார்க்கின்றபோது, தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அவர்கள் அடுத்துவரும் காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் தருணத்தில் அவர்கள் ஏலவே மைத்திரி - ரணில், கூட்டாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறித்த இடைக்கால அறிக்கையானது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. அது ஒற்றையாட்சியை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள ஒன்றாகும். ஆகவே குறித்த இடைக்கால அறிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுவதன் காரணமாக அவர்கள் எந்தவிதமான முடிவுகளுக்கும் செல்ல முடியும். ஆனால் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே அவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அதற்காக தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தயாரிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுக்கான வரைவினை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

குறித்த வரைவு தயாரிக்கப்பட்ட போது சுமந்திரன் தவிர ஏனைய கட்சிகள் அனைத்துப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ச்சியாக அவர்களின் பங்கேற்பு முழுமை பெறும் வரையில் நீடித்திருக்கவில்லை.

எவ்வாறாயினும் கொள்கை அளவில் அனைவரும் தமிழ் மக்கள் பேரவையின் வரைவினை ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அதனை மையப்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிப்பது பொருத்தமானதாக இருக்கும். இந்தச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கும் ஏனையவர்கள் அதில் பங்கேற்பதற்குமான பகிரங்க அறிவிப்பை நாம் விடுக்கின்றோம் என்றார். (ந-7)

## காற்றழுத்தத்...

கிலோமீற்றர் வேகத்தில் இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடும் மழையுடனான வானிலை காரணமாக அருவிகள், குளங்கள், அணைகள் என்பன நிரம்பி ஓடுவதால் பொதுமக்களை அவதானமாகச் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா விடுத்த வானிலை பற்றிய அறிக்கையில் காற்றழுத்தத் தாழமுக்கம் இன்று (25) அல்லது நாளை (26) புயலாக மாற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2024.11.24 சீட்டிழுப்பு இலக்கம் 5665
K 7 0 7 7 2 8
அத சம்பத K 7 7 2 8 சீட்டிழுப்பு இலக்கம் 0240
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.24 சீட்டிழுப்பு இலக்கம் - 1695
R 22 37 58 74 R
Double Chance 88625

மெகா பவர்
திகதி 24/11/2024 சீட்டிழுப்பு இலக்கம் 2013
G 20 17 18 66 71
099585

லக்கி 7 VIP
திகதி 2024.11.24 சீட்டிழுப்பு இலக்கம் 0491
Q 3 3 2 1 3 8 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3907 சீட்டிழுப்பு திகதி 24.11.2024
G 08 09 24 31
G 042181
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.24 சீட்டிழுப்பு இலக்கம் 0974
கன்னி 03 19 31 32 கன்னி
129829 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.11.2024 வெற்றி வாரம் 373
E 8 1 7 5 2 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,101,416.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2639 சீட்டிழுப்பு திகதி 2024.11.24 தினம் ஞாயிற்றுக்கிழமை
07 18 19 22 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,261,290.40
DLB

சனிதா
திகதி 24.11.2024 வெற்றி வாரம் 4800
24 33 34 41 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,252,859.60
DLB

சசிரி
564 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 18 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4351 சீட்டிழுப்பு திகதி 24.11.2024 தினம் ஞாயிற்றுக்கிழமை
12 19 35 36 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,334,426.80
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 21 36 41 47 52
1815 24.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,279,039.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை வெற்றி வாரம் : 2465 சீட்டிழுப்பு திகதி : 2024.11.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,679,748.00
12 33 41 58 U
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L வரலாறு

யாழ் முதல்நிலை வரலாற்றாசிரியர்,

**M.பத்மன்**

[B.A(Hons)History, P.G.D.E, Dip.in. psy, M.A(Hons)History, M.E.D(OUSL)]

➡ 2K26, 2K25ற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

➡ விடுமுறைக்கால விசேட வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

கற்பிக்கும் இடங்கள் :

D.M.I ஆரியகுளம், யாழ்.நகர்

BITSMANS மானிப்பாய்

High College குளப்பிட்டி, கொக்குவில்

T. P : 0774825587

(C-1654)



## இறைச்சிக் கோழி விற்பனை

(2491)



புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்யப்பட்டு எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



**U.S.A பாம்**

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் :

077 391 2298/ 076 009 8661

(2607)


# இலங்கைப் படகில் போதைப்பொருள்

## கைப்பற்றியது மாலைதீவுக் கடற்படை

(மாலைதீவு)

இலங்கைக்குச் சொந்தமான மீன்பிடிப் படகொன்றி லிருந்து 344 கிலோகிராம் மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள் மற்றும் 124 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் என்பன மாலைதீவுக் கடலோரக் காவல்படையினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையினர் வழங்கிய தகவலுக்கு அமைய, மாலைதீவு கடலோர காவல்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது குறித்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மீன்பிடிப் படகில் பயணித்த சந்தேக நபர்கள் ஐவரும் மாலைதீவுக் கடலோரக் காவல் படையினால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

அஷேன் புத்தா எனப்படும் பல நாள் மீன்பிடி படகொ ன்றே இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ளதுடன், குறித்த மீன்பிடி படகு, போதைப் பொருள் கடத்தல் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டமை தெரியவந் துள்ளது.

தெய்வேந்திரமுனை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 21 முதல் 37 வயதுக்கு இடைப்பட்ட ஐவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த போதைப் பொருள் தொடர்பில் இரு நாட்டு பாது காப்பு அதிகாரிகளுக் கும் இடையே தகவல்கள் பரிமாற்றப்பட்டு விசாரணைகள் முன் னெடுக்கப்படுவதாகக் கடற்படை ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ந-7)


## வேலையாட்கள் தேவை

வீட்டில் வேலை செய்வதற்கும் வளவுகள் துப்பரவு செய்வதற்கும் ஆண், பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

(2605)

076 467 9663



V2 VISA SERVICES

கனடா

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments

• இந்தியா Visas • Online Visas - All countries

• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1650)



## பணியாளர் தேவை

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றுக்கு அலுவலகப் பணியாளர் தேவை. யாழ்.நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு :

077 620 1474

(C-1652)



## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)

Happy Super market - உரும்பிராய்

077 780 8030

(573)




## வேலைக்கு ஆள் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் கதைக்கப்படும்.

(C-1651)

077 428 6976


# மரண அறிவித்தல்



மலர்வு 1950.07.31

உதிர்வு 2024.11.24

## திரு. சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்)

உரிமையாளர்

( நியூ கமல் செரமிக்ஸ் ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம் மற்றும் ஞானம்ஸ் கோட்டல் – மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் )

கரம்பொன் மேற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 372, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்) அவர்கள் 24.11.2024 நேற்று ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற இராசரத்தினம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரி, கயேந்திரநாதன்(பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, குமாரசாமி, கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் தவமணிதேவி, காந்தமலர், கமலாதேவி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாழினி, Dr.கார்த்திகா, காலஞ்சென்ற கார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அச்சுதன்(மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் ஆணைக்குழு), Dr.மயூரன் (போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவீஷன், ஷாகீசன், அதிதிஸ்ரீ, ஆதித்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.11.2024 திங்கட்கிழமை பி.ப 2.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

372, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
071 815 7001, 077 404 8684

(2609)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.